1982 பிப்ரவரி 10]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

இணைப்பு.

(239ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 130-க்கான விடையைக் காண்க.)

விவர அறிக்கை.

(அ) பயிர் ஈட்டுறுதித் திட்டம் 1979–80 ஆம் ஆண்டு முதல் முன்னோடி திட்டமாக இம்மாநிலத்தில் அமுலில் உள்ளது.

(ஆ) பயிர் ஈட்டுறுதித் திட்டத்தை அமுலாக்க தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டங்களிலுள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் கடன் வாங்கும் விவசாய அங்கத்தினர்களை திட்டத்தின் கீழ் சேர்த்துக் கொள்வதன் வாயிலாக இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. உறுப்பினர்களிடம் இருந்து தவணைக் கட்டணத் தொகையைச் சங்கங்களின் வாயிலாக வாங்கி பொதுக் காப்பீட்டுக் கழகத்துக்குச் (General Insurance Corporation of India) செலுத்துவதும், விளைச்சல் குறிப்பிட்ட அளவுக்குக் கீழிருந்தால் பொதுக் காப்பீட்டுக் கழகத்திலிருந்து ஈட்டுத் தொகை பெற்று சங்கங்களின் வழியாக உறுப்பினர்களுக்கு உறுப்பினரின் கடன் கணக்கில் அத் தொகையை செலுத்துவதும் மத்திய கூட்டுறவு வங்கியின் பொறுப்பாகும். ஒரு விவசாயி காப்பீடு செய்யக்கூடிய அதிகபட்சத் தொகை 2,000 ரூபாய் ஆகும். இவ்வாறு எல்லா விவசாயிகளுக்கும் சேர்த்து ஓராண்டிற்கு காப்பீடு செய்யப்படும் தொகை சுமார் ஒரு கோடி ரூபாய் என வைத்துக் கொண்டால், இதில் 75 சதவீதமான 75 இலட்ச ரூபாய் பொதுக் காப்பீட்டுக் கழகம் பொறுப்பேற்கும். மீதி 25 சதவீதமான 25 இலட்ச ரூபாயை மாநில அரசு தமிழ்நாடு மாநிலப் பயிர்க் காப்பீடு நிதியிலிருந்து பொறுப்பேற்கும். (Tamil Nadu Corporation Insurance Fund) பயிர் ஈட்டுறுதித் திட்டத்தின் நெறி முறைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

(1) மாநில அரசு ஈட்டுத் தொகையிலும் தவணைக் கட்டணத்திலும் 25 சதவீத அளவிற்குப் பங்கேற்று கூட்டுக் காப்பாளராக இருக்கும்.

(2) காப்பீடு தொகை, வட்ட (Taluk) அடிப்படையில் இருக்கும். பொதுக் காப்பீட்டுக் கழகம் விவசாயிகளுடன் நேரிடைத் தொடர்பு ஏதும் வைத்துக் கொள்ளாது. அவ்வட்டத்தைச் சார்ந்து இயங்கி வரும் மத்தியக் கூட்டுறவு வங்கி வாயிலாக தொடர்பு கொள்ளும். ஒரு வட்டத்திற்கு ஒரு பயிருக்கு ஒரு

ஈட்டுறுதி ஆவணம். (Policy) மத்திய கூட்டுறவு வங்கிக்கு வழங்கப்படும். மத்திய கூட்டுறவு வங்கிக்கு எவ்விதத் தரகும் (commissior) இல்லை.

(3) தவணைக் கட்டண விகிதமும், ஈட்டுத் தொகையைக் கணக்கிடுதலும் ஒரு வட்டத்திலுள்ள விவசாயிகள் அனைவருக்கும் பொதுவானதாக இருக்கும்.

(4) மாநில வேளாண்மை மற்றும் புள்ளி விவரத் துறைகளால் நடத்தப்படும் அறுவடைப் பரிசோதனைகள் மூலம் விளைச்சல் மதிப்பிடப்படும். தனித்தனி விவசாயி அடிப்படையில் விளைச்சல் மதிப்பீடு செய்யப்படாது. ஒரு வட்டத்தில் 16 அறுவடை பரிசோதனை, ஆனால் ஒரு கிராமத்தில் இரண்டிற்கு மேல் அதிகமாகாமலும், நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அறுவடைப் பரிசோதனையில் அந்தந்த வட்டத்திலுள்ள விவசாயிகள் கலந்து கொள்ளும் பொருட்டு முன்னதாக விளம்பரப்படுத்தப் படுகிறது.

(5) தவணைக் கட்டணத் தொகை விவசாயிகளின் பயிர்க் கடனோடு சேர்த்துக் கொள்ளப்பட்டு மத்திய கூட்டுறவு வங்கிக்குச் செலுத்தப்படுகிறது. இதன் பொருட்டு, பயிர்க் காப்பீடுத் திட்டத்தை ஏற்க விவசாயிகளின் ஒப்புதல் பெற கடன் பத்திரத்தில் வழிமுறை செய்யப்பட்டுள்ளது.

(6) கொடுக்கப்பட வேண்டிய காப்பீட்டுத் தொகை முடிவு செய்யப்பட்டவுடன், முழுத் தொகையும் சம்பந்தப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்குச் செலுத்தப்படும். மத்திய வங்கி அத்தொகையை விவசாயிகளுக்குத் தரப்பட்ட கடன் தொகைக்குச் சரி செய்து கொள்ளும்.

(7) ஈட்டு அளவை விட பயிர் விளைச்சல் குறையும் பகுதிகளில் ஈட்டுத் தொகை வழங்கப்படும். பயிர் அறுவடை பரிசோதனை செய்யப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் அதன் விளைவு தெரிவிக்கப்பட்டு ஈட்டுத் தொகை கடன் தவணை தேதி துவங்குவதற்கு முன்னதாகவே கொடுக்கப்பட்டால் கடன் சரி செய்யப்பட்டு விவசாயி புதுக்கடன் பெற ஏதுவாகும்.

(8) ஈட்டு அளவை விட எந்த அளவுக்கு விளைச்சல் குறைவு படுகிறதோ அந்த விகிதத்தில் ஈட்டுத் தொகை வழங்கப்படும்.

உதாரணமாக, ஒரு வட்டத்தில் நெல் விளைச்சல் ஒரு ஏக்கருக்கு 1,000 கிலோ என்று வைத்துக் கொண்டால் ஈட்டளவு இந்த விளைச்சலில் 80 சதவீதம் அதாவது 800 கிலோ என்று நிர்ணயிக்கப்படும். விவசாயி இந்தப் பயிருக்கு 500 ரூபாய் பயிர்க்கடன் வாங்கியிருந்தால், காப்பீடு செய்த ஆண்டில் சராசரி

1982 பிப்ரவரி 10]

விளைச்சல் ஏக்கருக்கு 600 கிலோவாக இருந்தால் 200 கிலோ குறைவாகக் கொள்ளப்பட்டு கடன் தொகையில் 200/800—¼ பங்கு ஈட்டுத் தொகையாக கொடுக்கப்படும் வட்டித் தொகையும் சேர்த்துக் கொள்ளப்படுவதால் கடனும் வட்டியும் சேர்ந்து 530 ரூபாய் என்றால் அதில் ¼ பங்கு அதாவது 132.50 ரூபாய் ஈட்டுத் தொகையாகக் கொடுக்கப்பட்டு கடன் கணக்கில் வரவு வைக்கப்படும். வட்டத்தில் விளைச்சல் மொத்தமாக பொய்த்து விட்டால் கடனும் வட்டியும் சேர்ந்து 530 ரூபாயும் ஈட்டுத் தொகையாகக் கொடுக்கப்பட்டு கடன் கணக்குக்கு வரவு வைக்கப் படும்.

(9) வறட்சி, வெள்ளம், புயல், பூச்சிகள், நோய்கள் போன்ற இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பயிர் பாதிப்பு களை மட்டுமே இத்திட்டம் ஈடு செய்யும். போர் மற்றும் அணு சக்தியால் ஏற்படும் பாதிப்புக்கள் இத்திட்டத்தில் சேரா.

சட்டமன்றம் TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS